IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
A.S.No.16/2022
Deposition of Witness for CW1

Name : திரு.ஸ்ரீ பிரதாப்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.03.2026.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.
வாதி/மேல் முறையீட்டாளர் தரப்பில் முதல் விசாரணை

நான் நாகர்கோவில் மாவட்ட நில அளவை அலுவலகத்தில் முதுநிலை வரைவாளராக (Senior Draftsman, District Survey Office) பணியில் இருக்கிறேன். கல்குளம் தாலுகா, இரணியல் கிராமம் பழைய சர்வே எண்.3948A மற்றும் 3949 ஆகியவற்றின் correlation registers கொண்டு வந்திருக்கிறேன். அவற்றின் நகல் நீ.ம.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் பதிவேட்டுடன் ஒப்புமைப்படுத்தி பார்க்கப்பட்டது). பழைய சர்வே எண்.3948A என்பது 3948A– 1 முதல் 10 வரையிலும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. பழைய சர்வே எண்.3949 என்பதில் உட்பிரிவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

பழைய சர்வே எண்.3948A, ரீசர்வே எண்ணில்
3948A1 க்கு ரீசர்வே எண்.429/13.
3948 A2 க்கு ரீசர்வே எண்.429/24 part.
3948A3 க்கு ரீசர்வே எண்.429/24 part.
3948 A4 க்கு ரீசர்வே எண்.429/24 part.
3948 A5 க்கு ரீசர்வே எண்.429/23 part.
3948 A6 க்கு ரீசர்வே எண்.429/15,16,20,21 part.
3948 A7 க்கு ரீசர்வே எண்.429/12.
3948 A8 க்கு ரீசர்வே எண்.429/23 part.
3948 A9 க்கு ரீசர்வே எண்.429/21 part, 22, 23 part.
3948 A10 க்கு ரீசர்வே எண்.429/18. மற்றும்
3949 க்கு ரீசர்வே எண்.429/19.

பழைய சர்வே எண்.3948A 1 முதல் 10 ஆகிய சர்வே எண்களின் விஸ்தீரணம் மற்றும் அவை ரீசர்வே செய்யப்பட்ட ரீசர்வே எண்களின் விஸ்தீரணம் பற்றிய விபரங்கள் நான் தற்போது தாக்கல் செய்த Correlation register ல் இல்லை என்றால், சரிதான். பழைய சர்வே எண்.3949 விஸ்தீரயம் மற்றும் அது செய்யப்பட்ட ரீசர்வே எண்களின் விஸ்தீரணம் பற்றிய விபரங்கள் நான் தற்போது தாக்கல் செய்த Correlation register ல் இல்லை என்றால், சரிதான். பழைய சர்வே எண்ணின் வரைபடம் மற்றும் ரீசர்வே எண்ணின் வரைபடம் இந்த ஆவணத்தோடு இணைக்கப்படவில்லை என்றால், சரிதான். இந்த வரைபடங்கள் நீ.ம.சா.ஆ.6 ஆவணத்தோடு இணைக்கப்படாததால், ரீசர்வே எண்களில் விஸ்தீரணம் பற்றிய விபரங்களை என்னால் சொல்ல முடியாது என்றால், சரிதான்.

<u>பிரதிவாதி/ எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பொதுவாக Correlation register ல் பழைய சர்வே எண் மற்றும் ரீசர்வே எண்ணின் வரைபடங்கள் இணைக்கப்பட்டிருக்காது என்றால், சரிதான். நீ.ம.சா.ஆ.1 Correlation register ன் படி ரீசர்வே எண்.429/19 க்கு பழைய சர்வே எண்.3949 ஐ தவிர வேறு எந்த பழைய சர்வே எண்களும், பழைய சர்வே எண்களுக்கு உட்பட்ட சொத்தும் வராது என்றால், சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.